தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

தமிழ் இணையக் கல்விக்கழகம்

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை

இணைந்து நடத்தும்

# அயலகத் தமிழர் நாள்–2026

# அயலக மாணாக்கர்களுக்கான இணையவழிப் போட்டிகள் 2025–26



## போட்டிகள் (நான்கு)

- பேச்சுப்போட்டி
- ஒப்பித்தல் போட்டி
- கதை சொல்லுதல் போட்டி
- மாறுவேடப் போட்டி

| வ.எண் | போட்டிகள் | வகைகள் |
|---|---|---|
| 1. | பேச்சுப்போட்டி | 1,2,3 வகைகள் |
| 2. | ஒப்பித்தல் போட்டி | 1,2,3 வகைகள் |
| 3. | கதை சொல்லுதல் போட்டி | 1,2,3 வகைகள் |
| 4. | மாறுவேடப் போட்டி | 1 & 2 வகைகள் |




# பேச்சுப் போட்டி

## வகை - 1

- தமிழால் இணைவோம்
- எனக்குப் பிடித்த நூல்
- தூய்மையே தொண்டு
- நான் பார்த்த ஊர்த்திருவிழா
- என் கனவு

## வகை - 2

- தமிழரின் கலைகள்
- நான் விரும்பும் ஆளுமை
- நூல்கள் அறிவின் ஊற்று
- என் வாழ்வில் மறக்க முடியாத நாள்
- கல்வியே ஆயுதம்

## வகை - 3

- தமிழ் - தமிழர் தொன்மை
- ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை
- நன்றும் தீதும் பிறர்தர வாரா
- உலகம் போற்றும் தமிழர்கள்
- சமூகநீதியும் சமத்துவ சமுதாயமும்

# ஒப்பித்தல் போட்டி

**வகை - 1**

வல்லிக்கண்ணன், அழ. வள்ளியப்பா கவிதைகள் (ஒரு கவிதை அல்லது இரண்டு கவிதை 15 முதல் 30 அடிக்குள்)

**வகை - 2**

கவிமணி தேசிக விநாயகம், நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் கவிதைகள் (ஒரு கவிதை அல்லது இரண்டு கவிதை 15 முதல் 30 அடிக்குள்)

**வகை - 3**

ந. பிச்சமூர்த்தி, கண்ணதாசன் கவிதைகள் (ஒரு கவிதை அல்லது இரண்டு கவிதை 15 முதல் 30 அடிக்குள்)

# கதை சொல்லுதல்

**வகை - 1**

பழமொழிக் கதைகள்

**வகை - 2**

திருக்குறள் கதைகள்

**வகை - 3**

சொல்ல நினைக்கும் கதைகள்

# விதிமுறைகள்

- இந்தியாவில் தமிழ்நாட்டைத் தவிர பிற மாநிலங்களில் உள்ள மாணாக்கர்கள் ஒரு பிரிவாகவும், வெளிநாடுகளிலுள்ள மாணாக்கர்கள் இன்னொரு பிரிவாகவும் கொண்டு தனித்தனியாகப் போட்டிகள் நடத்தப்படும்.
- இப்போட்டியில் கலந்துகொள்ள தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் மாணாக்கராகப் பதிவுசெய்திருத்தல் வேண்டும்.
- த.இ.க. மாணாக்கராகப் பதிவு செய்ய: https://tva.reg.payil.app/
- வயதின் அடிப்படையில் மூன்று வகைகளில் நான்கு போட்டிகள் நடத்தப்படும்.
- பேச்சுப்போட்டி, ஒப்பித்தல் போட்டி, கதை சொல்லுதல் போட்டி ஆகியவற்றில் மூன்று வகை மாணாக்கர்களும் பங்கேற்கலாம்.
- மாறுவேடப் போட்டியில் வகை-1, 2 மாணாக்கர்கள் மட்டுமே பங்கேற்கலாம்.
- போட்டிகளில் பங்கேற்க நுழைவுக் கட்டணம் இல்லை.
- மாணாக்கர்கள் தங்களது போட்டிகளுக்கான பதிவுகளை 3-5 நிமிடங்கள் கொண்ட தெளிவான காணொலியாகத் தமிழ்மொழியில் மட்டுமே பதிவுசெய்து, பதிவேற்றம் செய்திருக்க வேண்டும்.
- போட்டிக்கான பொருண்மைகள் அரசியல், சமயம் சார்ந்தவையாக இருத்தல் கூடாது.
- ஒவ்வொரு போட்டிக்கும் ஒவ்வொரு பிரிவிலும் மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான பரிசுத்தொகையும் பாராட்டு மின்சான்றிதழும் வழங்கப்படும்.

1 ரூ. 15,000 | 2 ரூ. 12,000 | 3 ரூ. 10,000

- போட்டிகளில் வெற்றிபெறும் மாணாக்கர்களுக்கான பரிசுத்தொகை வங்கிக் கணக்கில் மின்னணுப் பணப் பரிவர்த்தனை மூலமாகச் செலுத்தப்படும்.
- வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு அவர்கள் பரிந்துரைக்கும் நபரின் வங்கிக் கணக்கில் மின்னணுப் பணப் பரிவர்த்தனை மூலம் பரிசுத்தொகை செலுத்தப்படும்.
- போட்டிகளில் பங்கேற்கும் அனைவருக்கும் பங்கேற்பு மின்சான்றிதழ் வழங்கப்படும்.
- போட்டியில் வெற்றிபெற்ற மாணாக்கர்களின் பெயர்ப்பட்டியல் மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.
- போட்டி குறித்து, தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் முடிவே இறுதியானது.
- போட்டிக்கான பதிவுகளை அனுப்ப வேண்டிய கடைசி நாள்: 10.11.2025

போட்டிக்கான இணைப்பு: https://forms.gle/4rhrcHEEoW9sUKa16

மேலும் விவரங்களுக்கு: +91 8667822210
tpktva@gmail.com
www.tamivu.org